**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02-ஆம் நாள் வியாழக்கிழமை

CC. No. 81 of 2024

CNR No. TNTV15-000081 -2024

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 15/2023 ----- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

சிவபிராகாசம், 44/2026,
த/பெ. தங்கராசு,
ஆற்றாங்கரை தெரு,
நாராணமங்கலம். ------ எதிரி

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.81 of 2024 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Sub-Inspector of Police, Kodavasal PS. in Cr.No.15/2023 |
| 3. | Name of the accused | T. Sivaprakasam |
| 4. | Father's Name | S/o. Tangarasu |
| 5. | Occupation | - |



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:54:27 +0530

<table>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">Aatrangarai Theru,<br>Naranamangalam</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">44/2026</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">15.01.2023</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">16.01.2023<br>16.01.2023</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">16.01.2023, 22.01.2025</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">28.01.2023, 04.02.2025</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 207 Cr.P.C.</td><td colspan="3">03.12.2024</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 08.12.2023 the accused questioned on substance of accusation U/s.294(b),324,506(2) IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="5">15</td><td rowspan="5">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>10.03.26</td><td>-</td></tr>
<tr><td>PW2</td><td>10.03.26</td><td>-</td></tr>
<tr><td>PW3</td><td>10.03.26</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>26.03.26</td><td>26.03.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">30.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீது சட்டப்பிரிவு 294(b),324,506(2) இதச-ன் கீழ்</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:54:33 +0530

| | | |
|---|---|---|
| | | வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G. தினேஷ், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்** :-

1. குடவாசல் காவல் சரகம் நாரணமங்கலம் ஆற்றாங்கரை தெருவைச் சேர்ந்த இவ்வழக்கின் வாதியான சாட்சி -1 ம், சாட்சி -2 ம் 15.01.2023 ந் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் தனது வீட்டில் இருந்த போது, அங்கு வந்த இவ்வழக்கின் எதிரி வீட்டு வாசலில் நின்றுக்கொண்டு சாட்சி 1 யை பார்த்து குச்சிக்காரி உன் புருஷன் எங்கடி வெளியே வரச்சொல்லு எனத் திட்டியவரை, சாட்சி 1 ஆனவர் ஏன் இப்படி பேசுற எனக் கேட்டதற்கு, கீழே கடந்த கல்லை எடுத்து சாட்சி -1 னின்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:54:37 +0530

தலையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், சத்தம் கேட்டு ஓடி வந்த சாட்சி -2 யை எதிரி உன்னத்தான்டா எதிர்பார்த்தேன் தேவடியா மவனே, குச்சிக்காரி மவனே என திட்டி கல்லால் இடது காலில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் ஓடிவரவே எதிரி போகும் போது உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டியும் குற்றம்புரிந்துள்ளதால் எதிரிகள் மீது சட்டப் பிரிவுகள் 294(b),324,506(2) இதச ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவுகள் எதிரி மீது சட்டப்பிரிவு 294(b),336,427 இதச-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தன் மீதான குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார்கள். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:54:42 +0530

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது.

6. இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெறும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சி தாலுக்கா திருக்காட்டுப்பள்ளியில் வசித்து வந்து திருப்பூரில் உள்ள தனியார் கம்பெனியில் ஊழியராக வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு மாலை 06.00 மணியளவில் தான் நாரணமங்களம் ஆற்றங்கரைத்தெருவில் வேலைக்கு வந்திருந்த போது இரண்டு பேர் நடுவில் பிரச்சனை ஏற்பட்டுக்கொண்டிருந்தது என்றும், தான் என்னவென்று பார்க்க சென்றேன். அப்போது கூட்டமாக சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தன்னை யாரோ கீழே தள்ளவிட்டார்கள் என்றும், தான் கீழே விழுந்த போது அங்கிருந்த கல்லில் அடிப்பட்டு தனது தலையில் காயம் ஏற்படபட்டது என்றும், அதன் காரணமாக தான் திருவாரூர்அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றேன் என்றும், தான் சிகிச்சையிலிருந்த போது குடவாசல் போலீசார் தன்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், தான் மேற்சொன்ன சங்கதிகளை தான் போலீசாரிடம் கூறினேன் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:54:46 +0530

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சி தாலுக்கா திருக்காட்டுப்பள்ளியில் வசித்து வந்து திருப்பூரில் உள்ள தனியார் கம்பெனியில் ஊழியராக வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு மாலை 06.00 மணியளவில் தான் நாரணமங்களம் ஆற்றங்கரைத்தெருவில் செங்கல் சூலையில் வேலைக்கு வந்திருந்தபோது இரண்டு பேர் நடுவில் பிரச்சனை ஏற்பட்டுக்கொண்டிருந்தது என்றும், தான் என்னவென்று பார்க்க சென்றேன் என்றும், அப்போது கூட்டமாக சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தன்னை யாரோ கீழே தள்ளவிட்டார்கள் என்றும், தான் கீழே விழுந்த போது அங்கிருந்த கல்லில் அடிப்பட்டு எனது காலில் காயம் ஏற்படபட்டது என்றும், அதன் காரணமாக தான் திருவாரூர்அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றேன் என்றும், இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.3 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் தாலுக்கா நாரணமங்களம் கிராமத்தில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், தான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.4 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு. நாகராஜன் என்பவர் தற்போது வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருவதாலும், மேற்படி உதவி



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:54:51 +0530

ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும், நீதி நலன் கருதி கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு தான் இவ்வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 16.01.2023 ஆம் தேதியன்று குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் திரு. நாகராஜன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவலை பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையிலிருந்த சங்கலி முத்து மனைவி சசிகலா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண் 15/2023 இதச சட்டப்பிரிவுகள் 294(b),324,506(ii) ன் கீழ் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) என்றும், பின்னர் இவ்வழக்கினை மேற்படி உதவி ஆய்வளார் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அன்றைய தினமே 11.30 மணியளவில் சம்பவ இடமான வாதியின் வீட்டு வாசலில் போலிசார் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பிரவின் குமார் மற்றும் ரகு ஆகியோர்களின் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், (**பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையான சாட்சிகளை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவம் உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரியை தேடி வந்த நிலையில் திருவிடச்சேரி பஸ்ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை அன்றைய தினமே 14.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படித்தியுள்ளார் என்றும், பின்னர்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:54:55 +0530

இவ்வழக்கில் காயம்பட்ட சசிகலா மற்றும் சங்கிலிமுத்து ஆகியோர்களுக்கு விபத்து பதிவேடு மற்றும் சிகிச்சையளித்த திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.முகமது அலாவுதின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், மேற்படி காயம்பட்ட நபர்களின் விபத்து பதிவேடுகளும், மருத்துவ சட்ட கருத்துரைகளையும் பெற்றுள்ளார். (**சசிகலா என்பவரினுடைய விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகவும், சங்கிலிமுத்து என்பவரினுடைய விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆகவும், சசிகலா என்பவரினுடைய மருத்துவ சட்ட கருத்துரை அ.சா.ஆ.8 ஆகவும், சங்கிலிமுத்து என்பவரினுடைய மருத்துவ சட்ட கருத்துரை அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) என்றும், இத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் செய்கையானது இதச சட்டப்பிரிவுகள் 294(b),324,506(ii) ன் கீழ் தண்டிக்க தக்க குற்றம் என கடந்த 23.04.2023 ஆம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். என்றும் சாட்சிமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரிகள் "பொய் சாட்சி" என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்கள். இவ்வழக்கில் கு.வி.மு.ச.பிரிவு 320-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:55:00 +0530

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பவமானது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் சாட்சிகளிடம் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காண்பித்து அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

12. **<u>அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்</u>**:-

இவ்வழக்கின் அ.சா.1 கொடுத்த புகாரில், வாதியான சசிகலா, குடவாசல் காவல் சரகம் நாரணமங்கலம் ஆற்றாங்கரை தெருவைச் சேர்ந்த இவ்வழக்கின் வாதியான சாட்சி -1ம், சாட்சி -2 ம் 15.01.2023 ந் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் தனது வீட்டில் இருந்த போது, அங்கு வந்த இவ்வழக்கின் எதிரி வீட்டு வாசலில் நின்றுக்கொண்டு சாட்சி 1 யை பார்த்து குச்சிக்காரி உன் புருஷன் எங்கடி வெளியே வரச்சொல்லு எனத் திட்டியவரை, சாட்சி 1 ஆனவர் ஏன் இப்படி பேசுற எனக் கேட்டதற்கு, கீழே கடந்த கல்லை எடுத்து சாட்சி -1 னின் தலையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், சத்தம் கேட்டு ஓடி வந்த சாட்சி -2 யை எதிரி உன்னத்தான்டா எதிர்பார்த்தேன் தேவடியா மவனே, குச்சிக்காரி மவனே என திட்டி கல்லால் இடது காலில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் ஓடிவரவே எதிரி போகும் போது உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டியும் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளதாக புகார் அளித்துள்ளார்.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:55:04 +0530

13. ஆனால், நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்த அ.சா.1 தனது முதல் விசாரணையில்,தான் தற்போது திருச்சி தாலுக்கா திருக்காட்டுப்பள்ளியில் வசித்து வந்து திருப்பூரில் உள்ள தனியார் கம்பெனியில் ஊழியராக வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு மாலை 06.00 மணியளவில் தான் நாரணமங்களம் ஆற்றங்கரைத்தெருவில் வேலைக்கு வந்திருந்த போது இரண்டு பேர் நடுவில் பிரச்சனை ஏற்பட்டுக்கொண்டிருந்தது என்றும், தான் என்னவென்று பார்க்க சென்றேன். அப்போது கூட்டமாக சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தன்னை யாரோ கீழே தள்ளவிட்டார்கள் என்றும், தான் கீழே விழுந்த போது அங்கிருந்த கல்லில் அடிப்பட்டு தனது தலையில் காயம் ஏற்படபட்டது என்றும், அதன் காரணமாக தான் திருவாரூர்அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றேன் என்றும், தான் சிகிச்சையிலிருந்த போது குடவாசல் போலீசார் தன்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், தான் மேற்சொன்ன சங்கதிகளை தான் போலீசாரிடம் கூறினேன் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் புகார் மனுவில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் நேர் எதிரான சங்கதிகளை கூறி சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவின்றி முரண்பட்டதாக உள்ளது என்பதை தெளிவாக காண முடிகிறது. இவ்வாறு இருக்கையில், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் 3-ம் பிறழ் சாட்சியாக மாறியுள்ளனர். அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்ட போதிலும், அரசு தரப்பில்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:55:08 +0530

அவருக்கு ஆதரவாக அவர்களிடமிருந்து எவ்வித சாட்சியமும் குறுக்கு விசாரணையில் பெறப்படவில்லை.

14. எனவே, அரசு தரப்பு வழக்கில் கூறியுள்ளவாறு எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதற்கோ, அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை புரிந்ததற்கோ போதிய முகாந்திரம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியளிக்காத பட்சத்தில் அ.சா.4-ன் சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரிகள் குற்றவாளி என்று கருதுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும்போது, இவ்வழக்கில் உள்ள பிரச்சனை முற்றிலும் தனி நபர் தன்மையுடைய வினா சம்மந்தப்பட்டதாக இருக்கிறது என்பதையும், அரசுத் தரப்புக்கு சாதகமான நிலையில் முடிவினை எட்ட முடியாத நிலையில் இந்நிலையில், இவ்வழக்கை நடப்பில் வைத்திருப்பது ஒரு ஆடம்பரமே என்றும், இவ்வழக்கை முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் நீதிமன்றத்தின் பெரும்சுமையை குறைப்பதுடன் நீதிமன்றத்தின் நேரத்தை சேமிப்பதிலும், அதனை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண பயன்படுத்தவும் இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. எனவே, இவ்வழக்கில் எதிரி மீது சட்டப்பிரிவு 294(b),324,506(2) இதச-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:55:13 +0530

**உத்தரவு**

19. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரி மீது சட்டப்பிரிவு 294(b),324,506(2) இதச-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் ஏதும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் அதனை பொறுத்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணிணியில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:55:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. சசிகலா |
| அ.சா.2 | திரு. சங்கிலிமுத்து |
| அ.சா.3 | திரு. சண்முகம் |
| அ.சா.4 | திரு. ரவி-காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 16.01.2023 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 16.01.2023 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 16.01.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 16.01.2023 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 16.01.2023 | மாதிரி வரைப்படம் |
| அ.சா.ஆ.6 | 15.01.2023 | சசிகலா என்பவருடைய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.7 | 15.01.2023 | சங்கிலிமுத்து என்பவருடைய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.8 | 15.01.2023 | சசிகலா என்பவருடைய மருத்துவ சட்ட கருத்துரை |
| அ.சா.ஆ.9 | 15.01.2023 | சங்கிலிமுத்து என்பவருடைய சட்ட கருத்துரை |

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:55:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**வழக்கு சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | 16.01.2023 முதல் 28.01.2023<br>22.01.2025 முதல் 04.02.2025 |
| 2. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 05.08.2023 |
| 3. | குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 06.12.2024 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை | அரசு தரப்பில் 348 BNSS-ன் கீழ் 26.03.2026 அன்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | மனுக்களின் விவரம் | தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டது. | | |
| 5. | சாட்சிகள் விசாரணை | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | PW-1 : | 10.03.26 | - |
| | | PW-2 : | 10.03.26 | - |
| | | PW-3 : | 10.03.26 | - |
| | | PW-4 : | 26.03.26 | 26.03.26 |
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 27.03.2026 | | |
| 7. | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விபரம் | - | | |
| 8. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | - | | |

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.02 10:55:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.